பக்கங்கள் 23

காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 03 வெள்ளிக்கிழமை 19.07.2024 அதிர்வு 253

## யாழ். வணிகர் கழகத்தை சந்தித்தது அநுரவின் கட்சி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினரை தேசிய மக்கள் சக்தியின் உயர்மட்டக் குழுவினர் நேற்று யாழில் சந்தித்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தேசிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கடந்த 02



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்யவும்

## மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கை அரசிடம் வலியுறுத்தல்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகப் பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசு உறுதியளித்துள்ள போதிலும், இந்தச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத் துணை பணிப்பாளர் மீனாட்சி கங்குலி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சட்டத்தின் கீழ் பாதிப்படைந்த சிலர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் உள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

”இலங்கை அரசு, விமர்சகர்களை மௌனமாக்குவதற்கும், சிறுபான்மை சமூகங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அடிப்படையற்ற விதத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றது. 02



## யாழில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விசேட பொலிஸ் பிரினனரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் ஏ – 9 வீதியின் எழுதுமட்டுவாள் பொலிஸ் சோதனைச் சாவடியினூடாக இரண்டு டிப்பர் 02




‘தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்’ என்பது நீதித் துறையின்மகா வாசகம்.

ஆனால் இலங்கையின் நீதித்துறையில் சீந்தப்படாமல் – கவனிக்கப்படாமல் – ஒதுக்கப்படும் வாசகமும் இதுதான்.

உதாரணத்துக்கு ஒரு தகவலை 02

# தமிழர்களை ஏமாற்றாமல் தீர்வை வழங்க வேண்டும்

## தேசிய மக்கள் சக்தியிடம் யாழ். வணிகர் கழகம் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

"தந்தை செல்வா காலம் முதல் சம்பந்தன் காலம் வரை தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டே வந்திருக்கின்றனர். இனியும் இந்த நிலைமை தொடராமல் தமிழ் மக்களுக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும்."

– இவ்வாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான இ.ஜெயசேகரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியினருக்கும் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினருக்கும் இடையில் யாழில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியினர் எங்களை வந்து சந்தித்திருந்தனர். இதன்போது தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நாங்கள் பேசினோம்.

அதாவது தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சி அதிகாரத்துக்கு வந்த தரப்பினர்களால் தந்தை செல்வா காலம் முதல் சம்பந்தன் ஐயா காலம் வரை தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டியதுடன் இனியும் நாங்கள் ஏமாற்றப்படக் கூடாது என்பதையும் வலியுறுத்தினோம்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னராக அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கூறினோம்.

அவ்வாறு 13 ஆவது திருத்தத்தை இப்போது நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தியினர் முதலில் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தோம்.

மேலும் 13 இல் இப்போது உள்ளவற்றை நடைமுறைப்படுத்த தென்னிலங்கையில் தடையை ஏற்படுத்துகின்றனர் என்பதையும், அதில் இருக்கின்ற அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி அதனை முதலில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கோரினோம்.

இதற்கு நீங்கள் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினோம். ஏனெனில் இந்த 13 ஆவது திருத்தம் வடக்குக்கு மாத்திரமல்லாமல் நாடு முழுவதற்குமே உரியது. அதனால் அனைவருமே நன்மையடைய முடியும். ஆகையினால் இதனை நடைமுறைப்படுத்த நீங்கள் குரல் கொடுங்கள், அழுத்தத்தைக் கொடுங்கள் எனவும், இதனூடாக மக்களிடத்தே நம்பிக்கையை ஏற்படுத்துங்கள் எனவும் நாங்கள் கோரியிருந்தோம்.

இவ்வாறு நாங்கள் கேட்டபோது தங்கள் கட்சித் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுடன் இதைப் பற்றி பேசுவதாகவும், இதனை முன்னெடுக்கத் தாங்கள் ஆயத்தமாக இருப்பதாகவும், தங்களாலான முயற்சியை தாங்கள் எடுப்பதாவும் அவர்கள் பதிலளித்தனர்.

அதுமட்டுமல்லாமல் தாங்கள் முயற்சியை மட்டுமே இப்போது எடுக்க முடியும் என்றும் அவர்கள் கூறினர். ஏனெனில் தற்போது தாங்கள் ஆட்சியில் இல்லை என்றும், அவ்வாறு இந்த 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தற்போதைய ஆட்சியாளர்களின் கைகளிலேயே இருக்கின்றது என்றும், தங்களது ஆட்சி அமைகின்றபோது இதனைத் தங்களால் செய்ய முடியும் என்றும் அவர்கள் கூறினர்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழ். வணிகர்...**

ஒருசில வாரங்களுக்கு முன்பு வணிகர் கழகத்தை சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டபோது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு அரசமைப்பிலுள்ள 13 ஆவது சீர்திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று வணிகர் கழகம் கோரிக்கை விடுத்திருந்தது

அதற்கிணங்க நேற்று யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினரை தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணி உள்ளிட்ட 5 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவினர் சந்தித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், ஜனாதிபதி சட்டத்தரணி உப்புல் குமார பெரும, தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன், யாழ்ப்பாணம் வணிகர் சங்கத் தலைவர் இரட்ணவடிவேல் ஜெயசேகரம், அகில இலங்கை தமிழ் மகா சபையின் தலைவர் கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன், தந்தை செல்வா அறக்கட்டளையின் முதன்மை அறங்காவலர் சந்திரகாசன் இளங்கோ மற்றும் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**யாழில் இலஞ்சம்...**

வாகனங்களில் மணல் ஏற்றி வரப்பட்டுள்ளது.

இதன்போது அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் குறித்த இரண்டு டிப்பர் வாகனங்களிலும் சோதனை செய்ததுடன் அவர்களிடமிருந்து 45 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றிருக்கின்றார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து மேற்படி பொலிஸ் உத்தியோகத்தரை இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**பயங்கரவாத...**

இதனால், பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்பட வேண்டும்.

துறைசார் வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூகத்தினருடன் கலந்துரையாடி, உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இலங்கை அதிகாரிகள் உருவாக்க வேண்டும்"–என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

## இரகசியம் பரகசியம்

மட்டும் இன்று சொல்லி அமையலாம் என நினைக்கிறேன்.

பொலிஸ்மா அதிபர் போன்ற நியமனங்களுக்கு உரியவர்களை ஜனாதிபதி பரிந்துரைக்கலாம். ஆனால் அரசமைப்புக் கவுன்ஸில் அதனை அங்கீகரித்தால்தான் நியமனம் சாத்தியமாகும்.

கடைசி பொலிஸ்மா அதிபர் நியமன விடயத்தில் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரிக்கவில்லை. ஆனால் அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்தமை போன்ற அர்த்தத்தில் ஒரு கடிதத்தை கவுன்ஸில் தலைவரான சபாநாயகர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க, ஓரிரு மணி நேரத்துக்குள் புதிய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதவியேற்று விட்டார்.

இந்தக் குளறுபடிக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு உயர் நீதிமன்றத்திற்கு சென்றது.

அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு மாத காலத்துக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று அரசமைப்பு கூறுகின்றது. ஆனால் அது செயலில் நடப்பதில்லை. அதனை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்துவதும் இல்லை.

புதிய பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் பதவி ஏற்று ஆறு மாதங்கள் ஆகின்றன.

இப்போதுதான் அவர் தொடர்பான அந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பான பூர்வாங்க விசாரணையை முடித்து இருக்கின்றது நமது உயர் நீதிமன்றம். வரும் 24ஆம் திகதிதான் அதன் முடிவு தெரியவரும்.

உயர்நீதிமன்றம் விசாரணைக்கு மனுவை ஏற்றால், அந்த விசாரணை நடந்து முடியும்போது தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்று சென்று இருப்பாரோ என்னவோ தெரியவில்லை.

இந்தச் சமயத்தில் நீதிமன்றம் விசாரித்து அவரது நியமனம் தவறானது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு, உறுதிப்படுத்தினால் ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் பொலிஸ்மா அதிபர் பதவி வறிதாவது வேறு அரசியல் குழப்பங்களை கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இலங்கை நீதித்துறைக்கு 'ஆராரோ.. ஆரிவரோ...!' பாடத் தேவையில்லை. அது தானாகவே தூங்கி எழுந்துதான் விடயங்களை கையாளும்....

எல்லாம் நாட்டு மக்களின் தலையெழுத்து....!

# இடைநிறுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க ஜப்பான் தயார்



கடன் மறுசீரமைப்பு செயல்முறை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால், கடந்த காலத்தில் இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் உள்ளிட்ட ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானிய தூதுக்குழுவின் தலைவர் கலாநிதி இசுமி ஹிரோடோ தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் கைகோர்த்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடன் இணைந்து மிகக் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை எட்டியதன் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தின் மீது சர்வதேச சமூகம் கொண்டுள்ள நம்பிக்கையே பிரதிபலிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை வருகை தந்துள்ள வீடமைப்பு, நிர்மாண மற்றும் நகர்ப்புறத் துறைகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஜப்பானிய உயர்மட்டக் குழு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தது.

இலங்கையில் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் கீழ் ஜப்பானினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிப்பது மற்றும் இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பிலும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றம் குறித்தும் சர்வதேச நாணய நிதியத்துடன் செயற்பட்டு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடன் இணைந்து மிகக் குறுகிய காலத்தில் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டமை தொடர்பிலும் ஜப்பான் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டின் போது கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு ஜப்பான், இலங்கைக்கு வழங்கிய ஆதரவை நன்றியுடன் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, கல்வி, விவசாய நவீனமயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தி நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார். அதற்காக தற்போதைக்கு நிறுத்தப்பட்டுள்ள ஜப்பானிய ஒத்துழைப்பின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை மீள ஆரம்பிப்பது முக்கியம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கொழும்பு கப்பல்துறை இலங்கைக்கு பெறுமதிமிக்க நிறுவனமாக இருப்பதால் அதனை தொடர்ந்தும் முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டம், கொழும்பு துறைமுக கிழக்கு இறங்குதுறை அபிவிருத்தித் திட்டம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம் மற்றும் தொலைக்காட்சி டிஜிட்டல் ஒளிபரப்புத் திட்டம் ஆகியவற்றை உடனடியாக மீள ஆரம்பிக்க முடியும் என ஜப்பானிய பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

கடந்த ஆட்சியில் இடைநடுவில் நிறுத்தப்பட்ட இலகு ரயில் திட்டத்தை மீள ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக குறிப்பிட்ட ஜப்பானிய பிரதிநிதிகள், நல்லதொரு திட்டத்தை மீள அமுல்படுத்துவதற்கான சாத்தியம் இருப்பதாக தெரிவித்ததோடு, கொழும்பு நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான சிறந்த திட்டமான இலகு ரயில் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு சாத்தியமாக உள்ள இடங்கள் குறித்து ஆராய நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டனர்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீட்டுவசதி மற்றும் பிற நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதில் அரச -தனியார் கூட்டு முயற்சியின் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். இலங்கை அரசாங்கம் அதன் கொள்கைகள் மற்றும் சர்வதேச உடன்படிக்கைளுக்கு இணங்க சுற்றாடல் நட்பு திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் இந்த கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

ஜப்பானில் மின்சார விநியோகத் துறையை மேம்படுத்தும் நோக்கில் ஜப்பானில் தனியார் துறையிலுள்ள தொழில் வாய்ப்புகளுக்காக தொழில்நுட்பத் துறையில் இலங்கை பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்தத் தயாராக இருப்பதாக ஜப்பானிய பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

மேலும், கார்பன் வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக மேம்பட்ட ஜப்பானிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை உள்ளடக்கிய கூட்டு கார்பன் குறைப்பு பொறிமுறை குறித்து ஜப்பானிய பிரதிநிதிகள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.





# மன்னாரில் சொந்த வீட்டில் எடுப்பது போன்று சாகவாசமாக ஆட்டையைப் போட்ட திருடன்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக திருட்டு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் பெரியகமம் பகுதியில் உள்ள நான்கு வீடுகளில் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் திருட்டு இடம்பெற்ற வீட்டில் இருந்த சிசிரிவி காணொளியை பார்வையிட்ட போது சந்தேகத்திற்கு இடமான நபர் ஒருவர் சொந்த வீட்டுக்குள் நுழைவது போன்று நுழைத்து பொறுமையாக வீட்டை உடைத்து வீட்டில் உள்ள குளிர்பான பெட்டியில் இருந்து நீர் அருந்தி விட்டு வீடு முழுவதும் தேடுதல் மேற்கொண்டு வீட்டில் இருந்த நகைகளை திருடிச் சென்றுள்ளமை தெரிய வந்தது.

அதே நேரம் அந்த நபர் அருகில் இருந்த இன்னும் ஒரு வீட்டிலும் அவ்வாறு புகுந்து அவ் வீட்டில் இருந்த தாலி உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை அபகரித்துச் சென்றுள்ளார்.

வீட்டில் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட பின்னர் வெளியில் வந்து கதவை உடைத்த போது கதவில் உள்ள கை அடையாளங்களை இல்லாது செய்யும் நோக்குடன் தண்ணீரால் துடைக்கும் சிசிரிவி காட்சியும் பதிவாக உள்ளது.

இவ்வாறு மன்னார் சாவற்கட்டு பகுதியில் நான்கு திருட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த நிலையில் குறித்த வீட்டார் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தமையைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# யாழ். - சென்னை விமான சேவை நேற்றைய தினம் திடீரென ரத்து

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு இந்தியாவின் சென்னையில் இருந்து வரும் விமானத்தின் சேவை நேற்றைய தினம் திடீரென ரத்துச் செய்யப்பட்டது.

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு பயணிகளுடன் வரும் விமானம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பயணிகளை ஏற்றியவாறு சென்னைக்குத் திரும்பிச் செல்வது வழமையாகும்.

இவ்வாறு தினசரி இடம்பெறும் விமான சேவை முன் அறிவித்தல் இன்றி நேற்றைய தினம் இரு வழிப் பயணமும் திடீரென நிறுத்தப்பட்டது.

விமானத்தில் ஏற்பட்ட சிறு கோளாறு காரணமாக அது நேற்று ஈடுபடவில்லை எனவும் இருந்தபோதும் இன்று முதல் வழமைபோன்று விமான சேவை இடம்பெறும் எனவும் பயணிகளிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
FM
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA

# விடுதலைப் புலிகளே செய்யாததை தற்போது ஆசிரியர்கள் புரிகின்றனர்

## மனுஷ நாணயக்கார கூறுகின்றார்



தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த யுத்தக் காலத்திலும் பாடசாலைகளை மூட இடமளிக்கப்படவில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மத்துகம பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"யுத்தம் நடந்த சந்தர்ப்பத்தில் ஆசிரியர்கள் பதுங்குக் குழிகளுக்குள் அமர்ந்து மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தனர்.

தொழிற்சங்கங்கள் தமது அரசியல் நலனுக்காக 10,000 பாடசாலைகள் மூடப்படுவது அவர்களது பலம் எனக் கருதுகின்றனர்.

யுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் பாடசாலைகளை மூடுவதற்கு இடமளிக்கவில்லை.

ஆசிரியர்கள் தெய்வங்கள் என்ற நிலைமையை மாற்றி, பாடசாலைக்குச் செல்லாத தொழிற்சங்கங்களின் தலைவர்கள் அரசியல் நலனுக்காக அதிபர்களையும் ஆசிரியர்களையும் பயன்படுத்தி இலவசக் கல்விக்குப் பாரிய களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

கட்சி நிற வேறுபாடின்றி ஒரே அரசாங்கத்தில் இணைத்துள்ளோம்.

இன்று அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் அரசியலைப் பற்றிச் சிந்திக்காமல் ஒன்றிணைந்துள்ளனர்."– என்றார்.

# ஜனாதிபதி தொடர்பில் அடிப்படையற்ற கருத்துக்கள் எதிர்க்கட்சியினர் பகிரங்க விவாதத்திற் வரவேண்டும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அழைப்பு




"நாடு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் நாட்டை மீட்டெடுக்கும் சவாலை ஏற்றுக்கொண்ட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு வருடங்களில் முன்னெடுத்த சரியான பொருளாதார வேலைத்திட்டத்தின் காரணமாகவே நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடிந்தது. இது தொடர்பாக எதிர்மறையான மற்றும் ஆதாரமற்ற போலியான அறிக்கைகளை வெளியிடுவோர் பொதுவான மேடையில் பகிரங்க விவாதத்திற்கு வரவேண்டும்."

– இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகயிலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக முடிவுகளில் மிகவும் வலுவான முடிவாக அமையும் என்பதை நாம் அறிவோம். இவ்வாறான வேளையில் இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நாட்டின் நிலைமையையும் இன்றைய நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான களமொன்று அமைக்கப்பட வேண்டும். மக்களின் பாதுகாப்பு, நலன் மற்றும் மேம்பாடு என்பன அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனவே, இந்த இக்கட்டான காலகட்டத்தில் பகிரங்க விவாதங்களுக்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் நாட்டை மீட்பதற்கான சவாலை ஏற்றுக்கொண்ட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த இரண்டு வருடங்களில் செய்த சாதகமான விடயங்கள் மூலம் நாட்டை சரியான பாதைக்கு கொண்டு வர முடிந்தது.

இது தொடர்பாக எதிர்மறையான கருத்துக்களை முன்வைக்கும் எதிர்க்கட்சி எம்.பி.க்களும் பொருளாதார ஆய்வு நிறுவனங்களின் நிபுணர்களை பொது மேடையில் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கிறேன்.

கடந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி மேற்கொண்டுள்ள சாதகமான நடவடிக்கைகளை விரிவாக தெளிவுபடுத்த நிதி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் நான் தயாராக உள்ளேன்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிதியமைச்சர் என்ற வகையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான புதிய கடன் திட்டம் இன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனின் கீழ் 7 வீத லுகை வட்டியுடன் இந்தக் கடன் வழங்கப்படவுள்ளது. இதற்காக 50 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு, மத்திய தரத்திலான தொழில்களை வலுப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும்.

இதன் கீழ், அதிகபட்சமாக 10 மில்லியன் ரூபாவிற்கு உட்பட்ட கடனைப் பெற முடியும். அத்துடன் சிறிய தேயிலை தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு 06 பில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு 02 பில்லியன் ரூபா வழங்கப்படும்.

கடன் உத்தரவாத நிறுவனம் ஒன்றின் தேவை காணப்படுகிறது. அந்த கடன் மூலம், எதிர்வரும் ஒக்டோபரில் கடன் உத்தரவாத நிறுவனம் ஆரம்பிக்கப்படவுள்ளது. கடனுக்கான பிணையொன்றை வைக்க முடியாத வேளையில் கடன் உத்தரவாத நிறுவனம் அதற்கான உதவிகளை வழங்கும்.

அத்துடன், வாகன இறக்குமதியில் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து துறைகள் தொடர்பிலும் ஆராய விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் முதல் அமர்வு ஜூலை முதல் வாரத்தில் நடைபெற்றது. இதன்படி ஒகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். பின்னர் வாகனங்களை எப்படி இறக்குமதி செய்வது என்பது குறித்து முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன், சுங்க பரிசோதகர்கள் ஆள்சேர்ப்புக்கான பரீட்சை முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. நேர்முகப் பரீட்சை ஜூலை 26 - 27 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது. மேலும் உதவி சுங்க அத்தியட்சகர்களுக்கான ஆள்சேர்ப்பு முடிவுகள் இந்த வாரம் வெளியாகும். இந்த ஆள்சேர்ப்பு வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுகிறது." – என்றார்.

# இலங்கையில் நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்துறைக்கு புத்துயிர் அளிக்க நிதி



"நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீள வலுவூட்டும் நோக்கில், நுண், சிறு மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான முதலீடு மற்றும் செயற்பாட்டு மூலதன வசதிகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய நிதி வசதிப் பெக்கேஜ் ஒன்றை அறிமுகம் செய்யும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

மானிய வட்டி விகிதத்தில் அனுமதி பெற்ற வணிக வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற விசேட வங்கிகள் உட்பட 15 நிதி நிறுவனங்கள் மூலம் நெருக்கடியை எதிர்கொண்டு செயற்படும் நுண், சிறு மற்றும் மத்திய தொழில்முயற்சியாளர்களுக்கு நிவாரணம் வழங்கல் மற்றும் செயற்பாடற்ற கடன் பிரிவின் கீழ் இருக்கும் நுண், சிறு மற்றும் மத்திய தொழில்முற்சிகளுக்காக ஒத்துழைப்பு வழங்குதல் ஆகிய பிரதான இரு பிரிவுகளின் கீழ் இந்தக் கடன் வழங்கப்படும்.

அந்த நோக்கத்திற்காக, தொழில்துறை அமைச்சினால் நிதி உதவி தேவைப்படும் மற்றும் அவர்களின் வணிகங்களை மேலும் மேம்படுத்தும் திறன் கொண்ட தகுதியுள்ள நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு பரிந்துரைக் கடிதங்கள் வழங்கப்படும்.

நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை வலுப்படுத்தும் முதலீட்டுக் கடனின் கீழ், 10 வருட காலத்திற்கு 7 வீத சலுகை வட்டி விகிதத்திற்கு உட்பட்டு, அதிகபட்சமமாக 15 மில்லியன் ரூபாக்கு உட்பட்டு கடன் வழங்கப்பட இருப்பதோடு இதற்காக 13 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. .

செயற்படாத கடன் பிரிவின் கீழ் உள்ள நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு மூலதனமாக 5 வருட காலத்திற்கு உட்பட்டதாக 8 வீத கடன் வட்டியின் கீழ் 5 மில்லியன் ரூபா கடன் வழங்கப்படுவதோடு அதற்காக 5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, ஹட்டன் நேஷனல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட், யூனியன் வங்கி, பான் ஆசியா வங்கி, கார்கில்ஸ் வங்கி ஆகியவை பங்கேற்பு நிதி நிறுவனங்களாக செயற்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது..

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

"எந்தவொரு நாட்டையும் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களைப் பலப்படுத்த வேண்டும்.

கடந்த பொருளாதார வீழ்ச்சியினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களே. அவர்களின் மீட்சிக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களுக்குத் தேவையான மூலதனத்தை வழங்குவதற்காக தேசிய அபிவிருத்தி வங்கி ஸ்தாபிக்கப்படும்."– என்றார்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தொடரும் பயங்கரம்!

அரச எதிர்ப்பாளர்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்தவர்களை நம்பத்தகுந்த ஆதாரங்களின்றியே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி இலக்கு வைத்துத் தொந்தரவு பண்ணும் வேலையை இலங்கை அதிகாரிகள் தொடர்கின்றனர் என அமெரிக்காவை மையமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் மீண்டும் குற்றம் சுமத்தியுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள தற்போதைய பிந்தைய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், விமர்சகர்களை மௌனமாக்குவதற்கும், சிறுபான்மை சமூகங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அடிப்படையற்ற விதத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றது. இதனால், பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்பட வேண்டும்.

துறைசார் வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூகத்தினருடன் கலந்துரையாடி, உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இலங்கை அதிகாரிகள் உருவாக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்ட பின்னரும் கூட, பாதிக்கப்பட்டவர்கள் தன்னிச்சையான தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைகளை எதிர்கொள்கின்றனர் என அந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு செயல் ரீதியில் தடை விதிப்பதான அறிவிப்புகளை - உறுதிமொழியை - இலங்கையின் வெளிவிவகார அமைச்சர்கள் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆற்றிய உரைகளில் தந்திருந்த போதிலும் அவை பின்னர் காற்றில் பறக்க விடப்பட்டன என்பதையும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மீண்டும் சுட்டிக் காட்டியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகளும், தடுப்புக்காவல்களும் நடவடிக்கைகளும் தொடர்கின்றன என்றும் அந்த அமைப்புச் சுட்டிக்காட்டுகின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள - மிக மோசமான, கொடூரமான, மனிதாபிமானமேயற்ற விதிமுறைகளைக் கொண்ட - பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றி புதிய வடிவத்தில் மாற்றுச் சட்டம் கொண்டு வரப்படும் என சர்வதேச மட்டத்தில் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டு அதற்கான முன் நடவடிக்கைகள் பல தடவைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அவை வெற்றியளிக்க வில்லை.

ஒவ்வொரு தடவையும், இருப்பதையும் விட மோசமான சட்ட வடிவங்களே புதிது புதிதாகத் தயாராகின.

அதனால், நாட்டில் கடந்த 46 வருடங்களாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மிகக் கொடூரமானது, காட்டுமிராண்டித்தனமானது, மனித நாகரிக முறைமைகளுக்கு மாறானது என்று எல்லாத் தரப்புகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரும் அது தடையின்றி நாட்டில் நீடிக்கின்றது. ஆட்சியாளர்களும் வெட்கம், மானமின்றி, மக்களையும் தம் எதிர்ப்பாளர்களையும் அடக்கி, ஒடுக்க அந்தக் கொடூரச் சட்டத்தைத் தொடர்ந்து கையாளுகின்றனர்.

இலங்கை அரசின் வெளிநாட்டுப் பங்காளர்கள் மற்றும் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் தரப்பினர் போன்றோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்ய தொடர்ந்து கடுமையாக வலியுறுத்த வேண்டும், அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் துணை ஆசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்தார்.

1979ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்த பயங்கரவாத தடைச் சட்டம் 2009ஆம் ஆண்டு, வீழ்த்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையிலான போரின் போது தமிழ் மக்களை இலக்குவைக்க முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டது.

1996 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சுமார் எட்டு பேர் இன்னும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதிப் போரில் இறந்தவர்களை நினைவு கூர்ந்த 'குற்றத்திற்காக' மட்டுமே 09 பேரை இந்தச் சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு நகரத்தில் பொலிஸார் கடந்த வருடம் கைது செய்து தடுத்து வைத்தமையும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மிகப் பயங்கரமான சட்டம் ஒன்று இத்துணை கேவலமாக நாட்டில் தொடர்வது அதன் ஆட்சிக் கட்டமைப்பின் சீத்துவக் கேடின்றி வேறில்லை.



# புலமைப்பரிசில் பரீட்சைக்கு உதவும் ஆற்றல் நூல் வழங்கல்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவரது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு, மூதூர்,திருஇருதய வித்தியாலயம், திருகோணமலை கும்புறுபிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை,கும்புறுபிட்டி கனிஷ்ட வித்தியாலயம், நாவற்சோலை கனிஷ்ட வித்தியாலயம் என்பவற்றை சேர்ந்த ஐந்தாம் தர மாணவர்களுக்கு "ஆற்றல்" எனும் புலமைப் பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள், திருகோணமலை மாவட்ட நலன்புரிச்சங்கத்தால் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

ஒவ்வொன்றும் 1,930 ரூபா பெறுமதியுடைய இத்தேர்வு வழிகாட்டி நூல்களை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், திருகோணமலை மாவட்ட நலன் புரிச் சங்க தலைவருமான க.ச.குகதாசன் வழங்கி வைத்தார்

இந் நிகழ்வில் கனடா திருகோணமலை நலன்புரி சங்கப் பொருளாளர் லக்ஷ்மணபெருமாள் இலக்ஷ்மணவாசன் மற்றும் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க செயலாளர் கணபதிப் பிள்ளை சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# தேர்தலுக்கான நிதியினை தாமதமின்றி வழங்குவதற்கு நிதியமைச்சு இணக்கம்




ஜனாதிபதி தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட 10 பில்லியன் ரூபா நிதியை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தேவைக் கேற்ப தாமதமின்றி வழங்கப்படும் என நிதியமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் தேர்தல்கள் ஆணைக் குழு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் கடுமையான நிதி முகாமைத்துவத்துடன் செயற்படுவதால் குறித்த நிதியை வழங்குவதில் எவ்வித தடையும் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டி தெரிவித்துள்ளார்.

தபால் சேவைகள், அச்சிடும் பணிகள் மற்றும் பாது காப்பிற்கான செலவுகளை வழங்க தயாராக உள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.









# 1350 க்கும் அதிக உள்ளூராட்சி ஊழியர்களுக்கு கிழக்கில் நிரந்தர நியமனங்கள் வழங்கி வைப்பு

**(நூருல் ஹுதா உமர்)**

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் 10 வருடங்களுக்கு மேலாக தற்காலிக நியமனத்தில் பணிபுரிந்து வரும் ஊழியர்கள் தமது நிரந்தர நியமனங்கள் குறித்து கடந்த கால ஆளுநர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர்களிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். அவர்களால் எவ்வித வெற்றிகரமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாத நிலையில், சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தங்களது நிரந்தர நியமனம் குறித்தும், நிரந்தர நியமனம் இல்லாததால் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

ஆளுநர் செந்தில் தொண்டமான் இவ்விடயம் குறித்து ஜனாதிபதி, பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய தீர்வினைப் பெற்று தருவதாக உறுதியளித்திருந்தார்.

ஆளுநர் செந்தில் தொண்டமானால் உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 1350க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஒரே நாளில் நிரந்தர நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டது. அதில் முதல் கட்டமாக அம்பாறை மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

ஒன்பது மாகாணத்திலும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து பிரச்சினைகள் இருந்த போதும் கிழக்கு மாகாண ஆளுநர் இதுக்குறித்து அதிகம் கவனம் செலுத்தி ஒரே நாளில்



இந்நியமனங்களை வழங்கி வைத்தமை பாராட்டுகிரியது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் 10 வருடமாக காணப்பட்ட தங்களது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை ஒரு வருடக் காலத்திற்குள் பெற்றுத்தந்த ஆளுநருக்கு உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.









# நயினாதீவில் புத்தர் சிலை திருடிய குற்றத்தில் இளைஞர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நயினாதீவில் உள்ள பழைய விகாரையில் இருந்து புத்தர் சிலையைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



விகாரையில் இருந்த புத்தர் சிலையைத் திருடிக்கொண்டு படகில் ஏறி குறிகாட்டுவான் பகுதிக்கு வந்த நிலையில் மேற்படி இளைஞர் புத்தர் சிலையுடன் கைது செய்யப்பட்டார்.

அந்த இளைஞர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பொலிஸ் விசாரணையில் மேற்படி இளைஞர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்துள்ளது.

எனினும், மேலதிக விசாரணையின் பின்னர் அந்த இளைஞரை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.






# பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு அராலி வடக்கில் குலனையூரில்!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆடிப்பிறப்பு நாளைத் தமிழர் பண்பாட்டின் திருநாளாக நேற்று முன்தினம் புதன் கிழமை அராலி வடக்கு குலனையூரில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கர நேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வாடிப்பிறப்பு விழா குலனையூர் கலைவாணி சனசமூக நிலையம், கலை வாணி விளையாட்டுக்கழகம் ஆகினயவற்றின் அனுசர ணையுடன் ஞானவைரவர் ஆலய முன்றலில் இடம்பெற் றது.

பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை யின் முதல்வரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பொதுச் செயலாளருமான ச.லலீசன் கலந்து கொண்டார். இவர்களோடு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் ம.கஜேந்திரன், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன், கலை இலக்கிய அணியின் துணைச் செயலாளர் கை.சரவணன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

கலைவாணி சனசமூகநிலையத்தின் தலைவர் த.மது சீலனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகி, கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் நே.சாத்வீகனின் நன்றி யுரையுடன் நிறைவுற்ற இவ்விழாவில் குலனையூரின் ஏராள மான மக்கள் கலந்துகொண்டிருந்தார்கள். மாணவர்களின் ஆற்றுகையில் கலை நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெற்றி ருந்தன. அனைவருக்கும் ஆடிக்கூழும், கொழுக்கட்டையும் பரிமாறப்பட்டமையோடு கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்களுக்குத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் பரிசுப்பொருள்களும் வழங்கப்பட்டன.

தமிழர்களுக்கே உரித்தான ஒரு பண்பாட்டு அடையாள மான ஆடிப்பிறப்பும் அது சார்ந்த கொண்டாட்டங்களும் தற் போது அருகி வந்துள்ளன. இந்நிலையில் மீளவும் அதனை வெகுசனமயப்படுத்தும் நோக்கில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் கிராமமட்டத்தில் பொதுமக்களுடன் இணைந்து ஆடிப்பிறப்பைச் சிறப்பான முறையில் கொண் டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# 22 ஆவது அரசமைப்புத் திருத்த நகர்வுக்கு தன்பாட்டில் தடை விதித்தார் நீதியமைச்சர்



அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை வர்த்தமானியில் வெளியிடுவதை தவிர்க்குமாறு நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நீதி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தொடர்பில் நிலவும் நிச்சயமற்ற தன்மையை போக்கும் நோக்கில் இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

22 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் திருத்தங்களுடன் கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

என்றாலும், அது 21ஆம் திருத்தச்சட்டமாகவே அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட்டிருந்தது. 21ஆவது திருத்தம் தொடர்பில் அத்தருணத்தில் நிலவிய சிக்கல்கள் காரணமாக 22ஆவது திருத்தமாக நிறைவேற்றப்பட்டு 21ஆக உள்வாங்கப்பட்டது.

இந்தநிலையில் ஜனாதிபதியின் பதவிக்காலம் உட்பட பல்வேறு சிக்கல்களை தீர்க்கும் வகையில் இப்போது புதிதாக 22ஆவது திருத்தச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான அனுமதி கடந்த அமைச்சரவையில் வழங்கப்பட்டது.

இதற்கு நாடு முழுவதும் பல்வேறு எதிர்ப்புகள் எழுந்துள்ளதுடன், 22ஆவது திருத்தச்சட்டத்தை இத்தருணத்தில் நிறைவேற்ற அரசாங்கம் முற்பட்டால் கடுமையான போராட்டங்களை சந்திக்க நேரிடும் என எதிர்க்கட்சிகள் எச்சரிக்கையும் விடுத்துள்ளன.

என்றாலும், அடுத்த நாடாளுமன்ற அமர்வில் இதனை சமர்ப்பிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நகர்வுகளில் ஈடுபட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், 22ஆவது திருத்தச்சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட வேண்டாம் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாட்டில் நிச்சயமற்ற நிலைமையொன்றும் சந்தேகங்களும் எழுந்துள்ளதால் தேர்தல் முடியும்வரை இந்த விடயத்தை ஒத்திவைக்குமாறும் அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

පාරිභෝගික කටයුතු පිළිබඳ අධිකාරිය
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
CONSUMER AFFAIRS AUTHORITY

# வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கை

எரிபொருள், சமையல் எரிவாயு விலை மற்றும் மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டதன் பயனை நுகர்வோருக்கு வழங்காத வர்த்தகர்களை அடையாளங்காணும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியிலுள்ள உணவகங்கள் மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்கள் தொடர்ச்சியாக சோதனைக்குட்படுத்தப்படுகின்றன என நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் துஷித இந்திரஜித் தெரிவித்துள்ளார்.

பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகளை காட்சிப்படுத்தாமல் இருப்பது குறித்து கூடிய கவனம் செலுத்துமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

# அஸ்வெசும 2 ஆம் கட்ட விண்ணப்பங்களை ஆராயும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன

அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை ஆராயும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தின் கீழ் 475,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை கடந்த 13 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

அஸ்வெசும முதலாம் கட்டத்தின் கீழ் 34 லட்சம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அவர்களிர் 18 இலட்சம் பேர் அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொள்ள தகுதி பெற்றவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய 16 லட்சம் பேரின் விண்ணப்பங்களும் சமூக பாதுகாப்பு தரவுக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன என நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.



# இன்று கடல் கொந்தளிப்பு; மீனவர்களுக்கு எச்சரிக்கை

இன்று பிற்பகல் 1 மணிவரை கடல் கொந்தளிப்பாக இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாகப் புத்தளம் கடற்பரப்புகளிலும், அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 தொடக்கம் 65 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

மேலும், கடல் பகுதிகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாகப் பொத்துவில் வரை கடல் அலையின் உயரம் சுமார் 2.0 - 2.5 மீற்றர் வரை உயர வாய்ப்புள்ளதாகவும் அவ்வாறு உயரும் அலைகள் நிலத்தை நோக்கி வரக்கூடிய நிலை ஏதும் இல்லை என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, மீனவ மற்றும் கடல்சார் சமூகத்தினர் எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தில் வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதாகக் கூறி மோசடி

## ஒருவர் கைது

இங்கிலாந்தில் வேலை வாய்ப்பொ பெற்றுத்தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அந்த நபரைக் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் கைது செய்யப்பட நபர் இங்கிலாந்தில் ஆசிரியர் உதவியாளர் மற்றும் உணவகத்தில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி இருவரிடம் தலா 40 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து



சந்தேக நபர் தெஹிவளை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட சந்தேக நபர் சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மன்னார் சீதுவிநாயகபுரத்திற்கான வீதியை அமைப்பதற்கு இராணுவம் முட்டுக்கட்டை

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தின் சீதுவிநாயகபுரம் பகுதிக்குச் செல்லும் வீதியை அமைப்பதில் இராணுவத்தினர் முட்டுக்கட்டையாக உள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் ஏ32 சாலையின் இலுப்பைக்கடவை கிராமத்தில் இருந்து வீதிக்கு கிழக்கே 17 கிலோ மீற்றர் தொலைவில் மன்னார் மாவட்டத்தின் எல்லைக் கிராமமான சீதுவிநாயகபுரம் கிராமம் உள்ளது. இந்த கிராமத்திற்குச் செல்லும் வீதியானது வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமானது. இந்த வீதி ஐ றோட் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டது.

புனரமைப்புச் செய்யப்படும் சமயம் 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு மட்டும் வீதி அமைக்கப்படவில்லை. பாதை அமைக்கப்படாதமைக்கு பிரதான காரணம் கூராய் கிராமத்தின் முடிவில் ஒரு குளக் கட்டின் மேலாகவே தற்போதைய வீதி உள்ளது.

இதனால் எதிர்காலத்தில் குளத்தின் புனரமைப்பு பணிகள் கருதி குளக்கட்டின் மேலாக வீதியை அமைக்க மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் அனுமதி வழங்க மறுத்து விட்டது. குளத்தின் நன்மை கருதி அதனை ஏனைய திணைக்களங்களும் ஏற்றுக்கொண்டனர.

இதனால் குளக் கட்டினைத் தவிர்த்து அருகில் உள்ள காட்டின் ஊடாக புதிய பாதையில் வீதியை அமைக்க திட்டமிடப்பட்டது.

இதற்காக வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் 40 மில்லியன் ரூபா செலவு மதிப்பீடு செய்யப்பட்டு புதிய பாதை அமையும் காட்டுப் பிரதேசத்தை விடுவித்துத் தருமாறு வனவளத் திணைக்களத்திடம் மாவட்டச் செயலகம் ஊடாக விடுத்த கோரிக்கையை வனவளத் திணைக்களம் ஏற்றுக் கொண்டது.

வனவளத் திணைக்களமும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் காட்டுத் திசையில் வீதி அமைக்க முயன்றபோது அருகிலே உள்ள இராணுவ முகாமிற்காக அப்பகுதியை தாம் ஏற்கனவே வனவளத் திணைக்களத்திடமிருந்து பெற்றுள்ளதனால் வீதி அமைக்கக் கோரும் காட்டுப் பகுதியை வழங்க முடியாது என இராணுவம் தற்போது தடைபோடுகின்றது.

இதனால் இந்த சர்ச்சைக்குத் தீர்வுகாண விரைவில் மாவட்டச் செயலகம், வீதி அபவிருத்தித் திணைக்களம், வனவளத் திணைக்களம், இராணுவத்தினர் அடங்கிய கூட்டுச் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்ய மாவட்டச் செயலகம் முயன்று வருகின்றது.



# நல்லூர்க் திருவிழா காலத்தில் அடியாருக்கு நேரும் அசௌகரியங்களை நீக்க வேண்டும்

## இந்து தன்னார்வ தொண்டர் சங்கம் யாழ் மாநகர சபையிடம் கோரிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

நல்லூர்க் கந்தன் ஆலய திருவிழா காலத்தில் அடியவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்க வேண்டுமென இந்து தன்னார்வ தொண்டர் சங்கம் யாழ் மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இந்து தன்னார்வ தொண்டர் சங்கத்தின் தலைவர் தேவசாரங்கன் யாழ் மாநகர சபை ஆணையாளருக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ் மாநகர சபையானது நல்லூர் ஆலய நிர்வாகத்துடன் இணைந்து ஒருமாதகால திருவிழாவை கடந்த காலங்களில் மன நிறைவாக நடத்தியமை மகிழ்ச்சியை தருகிறது.

எனினும் கடந்த ஆண்டின் நல்லூர் திருவிழா காலத்தில், ஆலயத்திற்கு வருகை தந்த அடியவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்த தகவல்களை பத்திரிகை செய்திகள் மற்றும் பக்தர்கள் தெரிவித்த அதிருப்தி கருத்துகள் மூலம் அறிந்து கொண்டோம்.

பரிசீலனை செய்யப்பட்ட அனுபவங்கள் மற்றும் பத்திரிகை தகவல்களின் அடிப்படையில், கடந்த ஆண்டு அளவுக்கு அதிகமான வீதித் தடைகள் பொருத்தமற்ற பகுதிகளில் அமைக்கப்பட்டதால் அடியவர்கள் சன நெரிசலுக்கு உட்பட்டு மயக்கம் அடைந்து பெரும் அவலத்தை சந்தித்தனர். அவசரமான நேரத்தில் நோயாளர்காவு வண்டி கூட நுழைய முடியாத நிலை காணப்பட்டது .

மேலும், கடந்த ஆண்டு அளவுக்கு அதிகமான கடைகள் வியாபாரதரர்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டன, இதனால் பொதுமக்கள் நடமாட முடியாமல் வீதியின் மத்திய பகுதிக்கு தள்ளப்பட்டனர்.

குறிப்பாக சப்பர திருவிழா நாளில் ஏற்பட்ட நெருக்கடியின் போது நடைபாதையில் நகர்ந்து கொண்டிருந்த பக்தர்களை வியாபாரிகள் "எங்கள் கடைகளுக்குள் வர வேண்டாம், நாங்கள் காசு கொடுத்து தானே கடைகளைப் பெற்றுள்ளோம்" என வீதியின் நடுப்பகுதி நோக்கி விரட்டியதை கண்ணூடு பார்க்க முடிந்தது.

தொடர்ச்சியான வீதிதடைகளுக்கு இடையில் நடைபாதையின் இருபுறமும் வியாபார நிலையங்களால் ஆக்கிரமிக்கப்படிருந்த சூழ்நிலையில் பெருமளவு மக்கள் தெருவின் நடுப்பகுதியில் அபாயகரமான விதத்தில் சிக்குண்டு இருந்தனர்.

நூற்றாண்டு காலம் கடந்த நல்லூர் ஆலய மாண்பானது கெடும் வகையில் கடந்த ஆண்டு சமூக வலைத்தளங்களில் எழுந்த விமர்சனங்களும்,கிண்டல்களும் கண்டு பெரும் மன வேதனையடைந்தோம்.

இந்த வியாபார நிறுவனங்கள் மற்றும் விளம்பரங்கள் மெய் அடியவர்களின் ஆன்மீக உரிமைகளை, ஆலயத்தின் புனித தன்மையையும் குலைக்கின்றன. எனவே, இந்து தன்னார்வ தொண்டர் சங்கம் சார்பாக, கீழ்காணும் கோரிக்கைகளை முன்வைக்கிறோம்.

அடியவர்களிற்கு இடையூறற்ற வீதி தடைகள் :-

ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்களுக்கு நெரிசலற்ற மற்றும் சுகாதாரமான சூழலை உறுதிப்படுத்தும் வகையில், அடியவர்கள் கூட்ட நெரிசலில் சிக்காமல் இலகுவாக நகரக்கூடிய விதத்தில் வீதிதடைகளை அமைத்தல், மற்றும் பொருத்தமற்ற தடைகளை நீக்கல்.

வியாபார நிறுவனங்கள் மற்றும் விளம்பரங்களுக்கு அனுமதியளிக்காமை:-

வியாபார நிறுவனங்கள் மற்றும் விளம்பரங்கள் மெய் அடியார்களின் வழிபாட்டுரிமைக்கும் பக்திமயமான சூழ்நிலைக்கும் இடையூறாக அமைவதால், திருவிழா காலத்தில், ஆலய சுற்றுப்புறங்களில் கடைகள் மற்றும் வியாபாரிகளுக்கு அனுமதி அளிக்காமல், மக்கள் அமைதியாக வழிபாட்டை மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அவசர உதவிகள்:

கடந்த ஆண்டை போல் அல்லாமல் நோயாளர் காவு வண்டி மற்றும் அவசர சேவைகள் தேவையான இடத்தை இடையூறின்றி அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இந்த கோரிக்கைகளை நிறைவேற்றி நல்லூர் ஆலய சூழலில் ஆன்மீக சூழலை நிலை நாட்டவேண்டி மெய் அடியார்கள் சார்பாக இந்து தன்னார்வ தொண்டர் சங்கம் கோரிக்கை விடுப்பதாக அந்த கடித்த்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மலையக மக்களுக்கு நிரந்தரக் காணியை வழங்குவதுதான் அரசாங்கத்தின் நோக்கம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களை இனங்கண்டு அப்பகுதிகளைப் புதிய குடியேற்ற கிராமங்களாக சட்டரீதியாக பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான கலந்து ரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலை மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிராமங்கள், நகரங்கள் மற்றும் பெருந்தோட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மக்களுக்கு நிரந்தர காணி மற்றும் வீட்டு உரிமைகளை வழங்குவதே அரசாங்கத் தின் எதிர்பார்ப்பு எனவும் அதற்குத் தேவையான புரட்சிகர வேலைத்திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளதாகவுன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

அரச பெருந்தோட்டக் கம்பனி மற்றும் உள்ளூர் பெருந் தோட்டக் கம்பனிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தோட்ட மக்கள் வாழும் பகுதிகளை புதிய கிராமங்களாக சட்டரீதியாக பிர கடனப்படுத்தத் தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற் கொள்வது மிகவும் முக்கியமான என்பதாலும் காலத்திற்கு உகந்த முன்மொழிவு என்பதாலும் இதற்கான கொள்கை ரீதியான உடன்பாடும் எட்டப்பட்டது.

இந்த பிரேரணையை நடைமுறைப்படுத்தும் போது மலையகத்தில் வாழும் அனைத்து மக்களினதும் காணி உரிமையை உறுதிப்படுத்துவது இன்றியமையாதது என சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், இது தொடர்பான பிரேரணையை ஜனாதிபதியிடம் கைய ளித்தார்.

கிராமங்கள், நகரங்கள் மற்றும் பெருந்தோட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மக்களுக்கு நிரந்தர காணி மற்றும் வீட்டு உரிமைகளை வழங்குவதே அரசாங்கத் தின் எதிர்பார்ப்பு எனவும் அதற்குத் தேவையான புரட்சிகர வேலைத்திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு குறிப்பிட்டார்.

உள்ளூர் பெருந்தோட்டக் கம்பனிகளுடன் கலந்தாலோ சித்து அவர்களின் கருத்துக்களைப் பெற்று அதற்கான சட்டச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தோட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகள் அடங்கிய குழுவொன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார், நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகம்பரம், வடிவேல் சுரேஸ், வேலு குமார், எம். ராமேஸ்வரன் மற்றும் எம். உதயகுமார் ஆகியோரும் ஜனாதிபதியின் செயலா ளர் சமன் ஏக்கநாயக்க, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட் டமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம். நபீல், அரச பெருந் தோட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் கலாநிதி சுகத் யாலேகம உள்ளிட்ட அரச அதிகாரிகள் குழு பங்கேற் றனர்.













# கல்வித் துறையின் நவீனமயமாக்கலுக்கு யுனெஸ்கோவின் ஆதரவைப் பெறுவோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

"இலங்கையில் கல்வித்துறையில் முன்னெடுக்கப்படவுள்ள விரிவான நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்திற்கு யுனெஸ்கோ அமைப்பின் கல்வி பிரிவிடமிருந்து ஆதரவு பெற்றுக்கொள்ளும் ஆதேவேளை அதற்கான மறுசீரமைப்புச் செயற்பாடுகளுக்காக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிகளை பெறவுள்ளோம்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொனராகலை புதுருவகல மகா வித்தியாலய மாணவர் நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் மொனராகலை புதுருகல மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்த போது மாணவர்களுக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பாடசாலை மாணவர்களினால் நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு ஜனாதிபதி அலுவலக பிரதான கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

மேலும், ஜனாதிபதி மாணவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் பெறுமதியான இசைக்கருவிகளும் மிகக் குறுகிய காலத்திற்குள் வழங்கி வைக்கப்பட்டதையிட்டு மாணவர்கள் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

பாடசாலையின் மாணவர் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 96 உறுப்பினர்கள் மாணவர் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்துள்ளதுடன் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் நாடாளுமன்ற பொது செயலாளர் குஷானி ரோஹணதீர தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

"இந்த மாணவர் நாடாளுமன்றத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் எதிர்காலத் தலைவர்கள் உருவாவர். அதற்காக இங்கிருந்து பெரும் அனுபவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.பல பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றங்கள் இயங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்." – என்றார்.

ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ள பழைய நாடாளுமன்ற கட்டடத்தின் வரலாற்று மற்றும் புராதன பின்னணியை மாணவர்களுக்கு விளக்கிய ஜனாதிபதி, மாணவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார். அதனையடுத்து அரசமைப்புச் சபை மற்றும் நாடாளுமன்ற முறைமை தொடர்பிலும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

அதனைடுத்து நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர நாடாளுமன்றத்தின் வகிபாகம் குறித்து விளக்கினார்.

இந்நிகழ்வில் மொனராகலை புதுருவகல மகா வித்தியாலய அதிபர் எச்.எம்.யூ.பி. ஹேரத், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.







# இன்றைய ராசி பலன்கள் -19.7.2024




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவதற்கு சாதகமான நாள். அது உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். வளர்ச்சியை அளிக்கும். இன்றைய நாளை சிறந்ததாக ஆக்க புதிய வழிகளைக் காண்பீர்கள். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்கவும்.

உங்கள் அன்றாட பணிகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. இன்று அதிக பணிகள் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

உங்களிடம் அகந்தைப் போக்கு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.இதன் மூலம் உறவு வலுப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பணப்பற்றாக் குறையை சந்திப்பீர்கள். இதனால் வருத்தமான மன நிலை காணப்படும்.

இன்று ஆற்றல் குறைந்து காணப்படுவதன் காரணமாக முதுகு வலியால் அவதிப்படுவீர்கள். சிறந்த ஆரோக்கியத்துக்கு உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காது. இன்றைய சவால்களை கையாள அனுசரணையான அணுகுமுறை தேவை. தன்னம்பிகை குறைந்து காணப்படும். அதனை உருவாக்கிக் கொள்ளும் வழி காண வேண்டும்.

கடினமான பணிகள் காணப்படும். அதனால் நேரம் செலவாகும். கவலையை உண்டாக்கும். பணியிடத்தில் சவாலான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் இணக்கமான உறவு காணப்படாது. ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசுவதன் மூலம் இன்றைய நாளை இனிமையாக்கலாம்.

இன்று பண வரவு ஏற்படும் அதிர்ஷ்டம் காணப்படாது. பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்குக் கவலையை அளிக்கும்.

உங்கள் உடன் பிறந்தோரின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் திட்டங்களை செயலாற்ற நீங்கள் விரைந்து முடிவெடுப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கையை மேம்படுத்த முயற்சி செய்வீர்கள்.

பணியிடத்தில் நற்பெயர் பெறுவீர்கள். பல வாய்ப்புகள் காணப்படும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பை அதிகரிக்கச் செய்யும் நிலையில் இருப்பீர்கள்.

நீங்கள் சிறந்த மனநிலையில் காணப்படுவீர்கள். தன்னம்பிக்கையுடன் இருப்பீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நம்பிக்கையான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அதன் மூலம் நன்மை விளையும்.

இன்று பனியின் மூலம் பல சாதகமான பலன்கள் பெறுவீர்கள். கூடுதல் பணவரவு ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். அதனை நீங்கள் கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை நீங்கள் தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் உங்கள் பணிகளை அமைதியாக மேற்கொள்ள வேண்டியது அவசியம். திட்டமிட்டு அதன்படி பணிகளை மேற்கொள்ளுங்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி / இருமல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் அன்றாட செயல்களை கவனமாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சஞ்சலமான உணர்வுகளால் பாதிக்கப் படுவீர்கள். ஆன்மீக நடவடிக்கைகள் அமைதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவு ஏற்பட இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய பணம் காணப்படாது. கூடுதல் செலவுகள் மற்றும் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் மகிழ்சிகரமாக இருக்காது. ஒவ்வாமை காரணமாக இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நம்பிக்கையான, நன்மை தரும் நாள். இன்று பல நன்மைகள் விளையும். நீங்கள் சிறப்பாக திட்டமிட்டு முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் வெளியில் சென்று மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

மூத்தவர்களின் மூலம் பணவரவு பரிசாக கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று உங்கள் இலக்குகளில் சிறந்த வெற்றி காண இயலாது. இன்று நீங்கள் புதிய விஷயங்களை கற்க விரும்புவீர்கள். ஆனால் சில காரணங்களால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் செயல்களில் பொறுமையை கையாளுங்கள்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. பணிகள் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் அமைதியிழந்து உங்கள் துணையிடம் கோப உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும்.

பண வரவுக்கு இது சாதகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளுக்காக நீங்கள் பணம் செலவு செய்வீர்கள்.

பதற்றம் காரணமாக நீங்கள் அமைதியின்றி காணப்படுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.07.2024




உங்கள் திறமைகளை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும் என்பதால் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்படும். அதிகமாக சிந்திக்காமல் தெளிவான மன நிலையுடன் இருங்கள்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும் வகையில் இருக்கும். அதிக பணிகள் காரணமாக சில பணிகள் நிலுவையில் இருக்கும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான புரிந்துணர்வு பாதிக்கப்படும்.நீங்கள் அமைதியான நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. உங்களின் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரும். மன உளைச்சல் காரணமாக தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாள். எதிர்பாராதவிதமாக நன்மை கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். விருந்தினர்களின் திடீர் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் பணியில் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் உற்சாகமான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் கணிசமான தொகையை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சில அசௌகரியங்கள் காணப்படும். விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். உங்கள் தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அமைதியை அளிக்கும்.

உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும். நீங்கள் சிறந்த பலன் பெற இன்று கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிகரமாக நடந்துகொள்வீர்கள். இந்தப் போக்கு உறவின் புரிந்துணர்வை பாதிக்கும். உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பணம் கிடைக்கும். என்றாலும் சேமிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும்.

அதிக வேலை காரணமாக பதற்றமும் மூட்டுகளில் வலியும் ஏற்படலாம். இசையைக் கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். இன்று நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். எதிர்காலம் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்கும். பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

உங்கள் தேவைகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் பாதுகாப்பாக உணர்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக இன்று ஸ்திரமான முன்னேற்றகரமான ஆரோக்கியம் காணப்படும்.











# மட்டக்களப்பில் 483 பேருக்கு நிரந்தர நியமனங்கள் கிட்டின

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

உள்ளூராட்சி அதிகார சபைகளில் பதில், ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்களாக கடமை வகித்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிரந்தர நியமனக் கடிதங்களை 483 பேருக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகளும், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களும், உள்ளூராட்சிமன்றங்களின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நியமனங்கள் தமக்கு கிடைப்பதற்கு முயற்சு மேற்கொண்ட மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தன், சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு நியமனங்களை பெற்றுக் கொண்டவர்கள் தமது நன்றிகளை தெரிவித்திருந்தனர்.






# உத்தரப் பிரதேசத்தில் ரயில் விபத்தில் 4 பேர் பலி; மீட்புப் பணிகள் தீவிரம்



உத்தரப் பிரதேசத்தின் கோண்டா மாவட்டத்தில் சண்டிகர் - திப்ருகர் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என அம்மாநில துணை முதல்வர் பிரஜேஷ் பதக் தெரிவித்துள்ளார்.

கோண்டா மாவட்ட ஆட்சியர் நேஹா ஷர்மாவும் இதனை உறுதிப்படுத்தி உள்ளார்.

விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து வந்த கோண்டா மாவட்ட ஆட்சியர் நேஹா ஷர்மா, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். இதுதொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“சண்டிகர் - திப்ருகர் எக்ஸ்பிரஸ் ரயில் விபத்தில் 8 பெட்டிகள் தடம் புரண்டுள்ளன. 4 பேர் உயிரிழந்தனர் என பதிவாகி இருக்கிறது. மற்றவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். தயாராக இருந்த அனைத்து ஆம்புலன்ஸ்களும் சம்பவ இடத்தை அடைந்துள்ளன. மீட்புப் பணியில் உள்ளூர் மக்கள் மிகவும் உதவிகரமாக இருக்கிறார்கள்.”- என்றார்.


இந்த விபத்து குறித்து முதல்வர் யோகி ஆதித்யாநாத் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“கோண்டா மாவட்டத்தில் நடந்த ரயில் விபத்து மிகவும் வருத்தமளிக்கிறது. போர்க்கால அடிப்படையில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும், காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று உரிய சிகிச்சை அளிக்கவும் மாவட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.” - என்றார்.

சண்டிகரில் இருந்து அசாம் மாநிலத்தின் திப்ருகர் நகர் வரை செல்லும் சண்டிகர் - திப்ருகர் எக்ஸ்பிரஸ் ரயில், வழக்கம்போல் நேற்று முன்தினம் முற்பகல் 11.20 இற்கு புறப்பட்டது. நேற்று மதியம் 1.45 மணி அளவில் உத்தரப் பிரதேசம் மாநிலம் கோண்டா நிறுத்தத்தில் இருந்து கோரக்பூர் நோக்கி ரயில் பயணித்து கொண்டிருந்தது.

அப்போது கோண்டா மற்றும் ஜ/லாஹி ஆகிய பகுதிகளுக்கு இடையே உள்ள பிகவுரா என்ற இடத்தில் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

ஜூலாஹி ரயில் நிலையத்துக்கு சில கிலோ மீற்றர் தொலைவுக்கு முன்பு உள்ள பிகவுரா என்ற இடத்தில் இந்த ரயிலின் ஏசி கோச்சின் 8 பெட்டிகள் தடம் புரண்டன. விபத்து குறித்து அறிந்ததும் மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். மீட்புப் பணி தீவிரமாக நடந்து வருகிறது.



## குஜராத் மாநிலத்தில் புதிய வைரஸ் பரவல்

குஜராத் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் சந்திபுரா எனும் வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது.

குஜராத் மாநிலத்தில் மாத்திரம் கடந்த 2 வாரங்களில் இறந்த 6 குழந்தைகள், இந்த சந்திபுரா வைரஸ் தொற்றால் உயிரிழந்திருக்கலாம் என வைத்திய நிபுணர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, குழந்தைகளின் இறப்புக்கு இந்த வைரஸ் தான் காரணமா என்பதை உறுதி செய்வதற்கு இரத்த மாதிரிகளைப் புனேவில் உள்ள தேசிய நுண்ணுயிரியல் ஆய்வு நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மணல் ஈக்கள் மூலம் பரவும் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டு 24 முதல் 48 மணி நேரத்தில் மரணத்தை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், குஜராத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 44 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களிடம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## அருவியில் ரீல்ஸ் எடுத்த இளம்பெண் 300 அடி பள்ளத்தில் விழுந்து பலி

மகாராஷ்டிராவின் கும்பே அருவியில் ரீல்ஸ் எடுத்த இளம்பெண் 300 அடி பள்ளத்தில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தியாவின் மகாராஷ்டிராவில் உள்ள கும்பே அருவி ஒரு புகழ்பெற்ற அருவியாகும்.

வாரிசு திரைப்படத்தில் நடிகர் விஜய் அந்த அருவிக்குச் செல்வது போலப் பாடல் காட்சி படமாக்கப்பட்டிருக்கும்.

தற்போது இந்த அருவியைக் காண்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் பலரும் சென்று வருகின்றனர்.

அண்மையில் கும்பே அருவிக்குச் சுற்றுலா சென்ற இன்ஸ்டா பிரபலமான அன்வி காம்தர் (வயது 27) ரீல்ஸ் எடுத்துக் கொண்டிருந்த போது 300 அடி பள்ளத்தில் தவறி விழுந்துள்ளார்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர் பல மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர் அன்வி காம்தரை பலத்த காயங்களுடன் மீட்டனர்.

எனினும் அந்தப் பெண் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.








# சர்வதேச அளவில் பேசுபொருளாகியுள்ள விர்ஜின் விமான நிறுவனத்தின் ஊழியர்

அவுஸ்திரேலியாவின் விர்ஜின் விமான நிறுவனத்தில் இணைந்துள்ள பெண்ணொருவர் தற்போது சமூக ஊடகங்களில் அதிக பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்றுவருகிறார்.

விசேட தேவையுடைய அலே சேயர்ஸ் என்ற அந்த பெண் தனது திறமையால் விமான நிறுவனத்தில் கடமைகளை பொறுப்பேற்று கொண்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் சீருடையுடன் உள்ள புகைப்படமானது தற்போது சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

அலே சேயர்ஸ் பிறப்பிலிருந்தே விசேட தேவை உடைய பெண்ணாக காணப்பட்டுள்ளார். எனினும் தனது தனித்துவ திறமையாலும், அவரது செயற்பாட்டினாலும் சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக மாறியுள்ளார்.

அலே சேயர்ஸின் தந்தை ஒரு தொழிலதிபர் ஆவார். தனது மகளின் திறமைகளை வெளிக்கொண்டுவர சிறப்பாக பங்களித்ததாக அவர் கூறியுள்ளார்.

மேலும் விர்ஜின் விமான நிறுவனத்திற்கு கடமைப்பட்டுள்ளவனாக இருப்பேன் எனவும் கூறியுள்ளார்.

அத்தோடு விர்ஜின் விமான நிறுவனமானது ஒவ்வொரு ஊழியர்களினதும் தனித்துவத்துக்கு மதிப்பளிக்கின்ற விடயம் இதனூடாக வெளிப்படுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.



# பங்களாதேஷில் எதிர்ப்புப் போராட்டம்; தொலைபேசி, இணைய சேவை முடக்கம்











பங்களாதேஷில் பல்கலைக்கழக மாணவ குழுவினரால் ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்து மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகப் போராட்டக்காரர் களைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

மேலும் வதந்திகள் பரவுவதைத் தடுப் பதற்காகத் தொலைபேசி, இணையச் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பில் 30 வீத இட ஒதுக்கீடு வழங்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை மீளப் பெறுமாறு கோரி பல்கலைக்கழக மாண வர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தின்போது ஏற்பட்ட மோதலில் 6 பேர் வரையில் உயிரிழந் துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

போராட்டம் காரணமாக பங்களாதேஷ் முழுவதும் உள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களைக் கால வரை யறையின்றி மூடுமாறு அந்த நாட்டு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.